

'சுதந்திரமா தெருவுல சுற்றித்திரிந்த எங்கள புடிச்சிக் கொண்டுவந்து கூண்டுல அடச்சது மட்டுமில்லாமல், எங்க குடும்பத்த விருத்தியடைய செய்யவிடாம, கருத்தடை ஆபரேசன் செய்துட்டீங்களே' என்று பரிதாபத்துடன் கேட்கிறதோ... இந்த நாய்கள். கோவை சீரநாயக்கன்பாளையத்தில் உள்ள மாநகராட்சி கருத்தடை மையத்தில் கருத்தடை ஆபரேசன் செய்யப்பட்ட நாய்கள் கூண்டுக்குள் அடைத்து வைக்கப்பட்டு இருந்தபோது எடுத்த படம்.

### மாநகராட்சி பகுதியில் நாய்த்தொல்லையை குறைக்க

# 8,200 நாய்களுக்கு கருத்தடை ஆபரேசன்

கோவை,பிப்.13–

கோவை மாநகராட்சி பகுதியில் நாய்த்தொல்லையை குறைக்க 8 ஆயிரம் நாய்களுக்கு கருத்தடை ஆபரேசன் செய்யப்பட்டு உள்ளது.



'குளுகுளு' அறையில் ஒரு நாய்க்கு கால்நடை டாக்டர்கள் கருத்தடை ஆபரேசன் செய்வதை படத்தில் காணலாம்.

## நாய்த்தொல்லை

கோவை மாநகராட்சி பகுதியில் உள்ள நீண்டகால பிரச்சினை நாய்த்தொல்லை. ஒவ்வொரு மாநகராட்சி கூட்டத்திலும் இந்த பிரச்சினை எதிரொலிக்கும். அந்த அளவுக்கு நகரில் நாய்கள் அதிகரித்து இருக்கிறது. சாலைகளில் இரவு நேரங்களில் தெரு நாய்கள் கூட்டம் கூட்டமாக திரிவதோடு, ரோடுகளின் குறுக்கே திடீர் திடீரென ஓடி வாகன ஓட்டிகளை கீழே விழ வைத்துவிடுகின்றன.

இதை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளில் மாநகராட்சி நிர்வாகம் தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறது. தெருக்களில் சுற்றித்திரியும் நாய்களை பிடித்து அவற்றிற்கு கருத்தடை ஆபரேசன் செய்யப்படுகின்றன.

## கருத்தடை ஆபரேசன்

இதற்காக கோவை சீரநாயக்கன்பாளையத்தில் கடந்த 2006–ம் ஆண்டு ரூ.20 லட்சத்தில் மாநகராட்சி நாய்கள் கருத்தடை மையம் தொடங்கப்பட்டது. இந்த மையத்துக்கு தெருநாய்கள் 2 நாட்கள் அல்லது 3 நாட்களுக்கு ஒருமுறை பிடித்து கொண்டுவரப்படுகின்றன. பின்னர் அங்கு ஆண், பெண் நாய்கள் பிரித்து வைக்கப்பட்டு மயக்க ஊசி போட்டு கருத்தடை ஆபரேசன் செய்யப்படுகிறது.

அந்த வகையில் நேற்று முன்தினம் 20 நாய்களுக்கு ஆபரேசன் செய்யப்பட்டது. இதுதவிர ஆபரேசன் முடிந்து சிகிச்சையில் இருக்கும் 30 நாய்கள், மற்றும் ஆபரேசனுக்காக தயார் நிலையில் வைக்கப்பட்ட 20 நாய்கள் என தனித்தனி கூண்டுகளில் நாய்கள் அடைத்து வைக்கப்பட்டு இருந்தன.

## 8,200 நாய்கள்

பெண் நாய்களுக்கு இந்த மையத்தில் 'கி ஹோல் மெத்தேடு' என்ற நவீன முறையில் ஆபரேசன் செய்யப்படுகிறது. அதாவது மனிதர்களுக்கு செய்யப்படும் லேப்ராஸ்கோபிக் முறையைப்போல நவீன முறையில் அந்த மைய கால்நடை டாக்டர்கள் பிரபாகரன், பொற்கோவன் ஆகியோர் நாய்களுக்கு ஆபரேசன் செய்கின்றனர்.

இதுவரை இந்த மையத்தில் 8 ஆயிரத்து 230 நாய்களுக்கு கருத்தடை ஆபரேசன் செய்யப்பட்டு உள்ளது. ஆபரேசன் முடிந்ததும் அந்த நாய்களை மாநகராட்சி ஊழியர்கள் அவை பிடிக்கப்பட்ட பகுதியிலேயே கொண்டு சென்று விட்டுவிடுகிறார்கள். இருப்பினும் மாநகர பகுதியில் நாய்கள் தொல்லை அதிகமாக இருப்பதாக பொதுமக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

இதுபற்றி கருத்தடை மைய பொறுப்பாளரும், மாநகராட்சி உயிரியல் பூங்கா இயக்குனருமான பெருமாள்சாமி கூறியதாவது:–

## ரூ.445 செலவு

நாய்கள் கருத்தடை மையத்தில் ஆபரேசன் செய்யப்படும் ஒரு நாய்க்கு ரூ.445 செலவு செய்யப்படுகிறது. அது பிடிக்கப்படுவதில் இருந்து பராமரிப்பு, ஆபரேசன், கருத்தடை மருந்து செலுத்துதல், உணவு, திரும்ப அதை கொண்டு சென்று விடுவது ஆகியவற்றிற்கான செலவு அந்த 445 ரூபாய்க்குள் அடங்கும். ஒருமுறை கருத்தடை ஆபரேசன் செய்யப்படும் நாய் மறுமுறை இனப்பெருக்கத்துக்கு தகுதி பெறாது.

அதனால் கோவை நகரில் படிப்படியாக நாய்களின் பிறப்பு எண்ணிக்கை குறைந்து வருகிறது. இருப்பினும் நாய்களின் எண்ணிக்கையை திடீரென குறைக்க முடியாது. அதற்கு காரணம் விலங்குகள் ஆணையத்தின் உத்தரவுப்படி நாய்களை கருத்தடை மட்டுமே செய்யமுடியும். அதை கொல்லக்கூடாது. உதாரணமாக நகரில் 6 ஆயிரம் நாய்கள் இருக்கிறது என்றால் அவற்றை ஒரேகட்டமாக பிடித்து கருத்தடை செய்வது என்பது முடியாத காரியம்.

## குறைந்து உள்ளது

கருத்தடை ஆபரேசன் நடவடிக்கை மாநகராட்சி பகுதியில் மட்டும் செய்யப்படுகிறது. ஆனால் காளப்பட்டி, விளாங்குறிச்சி, வீரகேரளம், கவுண்டம்பாளையம், வடவள்ளி உள்பட சுற்றுப்புற பகுதிகளில் இருந்து நாய்கள் உற்பத்தியாகி நகருக்குள் ஊடுருவி வருகின்றன. இதன் காரணமாக கருத்தடை ஆபரேசன் செய்தாலும் நாய்களின் எண்ணிக்கை முற்றிலும் குறைந்ததாக தெரியவில்லை. இருந்தாலும் கடந்த 5 ஆண்டுகளை கணக்கிடும்போது நகரில் நாய்களின் எண்ணிக்கை வெகுவாக குறைந்து உள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.